மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவரவர்களே, வீட்டு வசதி வாரியத்தின் மூலம் பல்வேறு வேலைகள் ஆங்காங்கு எடுக்கப் படுகின்றன. போளூர் வீடு கட்டும் சங்கத்தின் மூலம் நல்ல அளவிற்குப் பணம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அங்கே அந்த அளவில் வேலைகள் நடக்கின்றன. குறைந்த அளவில் 100 வீடுகளையாவது கட்ட முன் வந்தால் தாலுக்கா நகரங்களில் எடுப்பதற்கு வீட்டு வசதி வாரியம் தயாராக இருக்கிறது.

திரு. கே. எஸ். குப்பல் இராமகிருஷ்ணன் : தலைவரவர்களே, சென்னையைத் தவிர மற்ற இடங்களுக்கு 40 லட்சம் ரூபாய் மட்டும் ஒதுக்கினால் குடிசை மாற்றும் வேலைகளைப் பூர்த்தி செய்ய முடியாது. எனவே, அதிகமான தொகையை ஒதுக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவரவகர்ளே, இந்த ஆண்டு 117.38 லட்சம் ரூபாய்க்கு 1,630 தனிக் குடியிருப்புகளைக் கட்ட வீட்டு வசதி வாரியத்தின் மூலம் குடிசைகளை மாற்றும் பணி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

முன்னாள் ராணுவத்தினர்களுக்குப் புதுவாழ்வு.

* 213 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா—

புதுக்கோட்டை மாவட்டத்தில் மாஜி ராணுவத்தினர் குடியமைப்பு திட்டத்தின் கீழ் கடைகள் கட்டி வாடகைக்கு விடும் உத்தேசம் அரசுக்கு உள்ளதா?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : இல்லை.

Tamil Nadu Forest Plantation Corporation

* 214 *Q.*—THIRU N. K. PALANISAMY :
THIRU B. VENKATASWAMY :

Will the Hon. the Minister for Commercial Taxes be pleased to state :

(*a*) Whether the Tamil Nadu Forest Plantation Corporation, Limited, has been formed ;

(*b*) if so, the members of the Board of Directors; and

(*c*) the functions of the Corporation?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவரவர்களே,—

(அ) ஆம்.

(இ) திரு. பி. கந்தசாமி, ஐ.ஏ.எஸ்., அரசுச் செயலாளர், காடுகள்—மீனளத் துறை—தலைவர்.

திரு. ஹர்பான்ஸ் சிங், ஐ.ஏ. எஸ்., அரசுச் சிறப்புச் செயலாளர், தொழில் துறை—இயக்குநர்.

திரு. கே. சொக்கலிங்கம், ஐ.ஏ.எஸ்., அரசுச் சிறப்புச் செயலாளர், வேளாண்மைத் துறை—இயக்குநர்.

திரு. கே. ஏ. போஜா ஷெட்டி, ஐ.எப்.எஸ்., வனத் துறைத் தலைவர்—இயக்குநர்.

திரு. கே. துரைராஜ், ஐ.எப்.எஸ்., வனப் பாதுகாவலர்—நிர்வாக இயக்குநர்.

(உ) தரிசுப் பகுதிகளில் காடு வளர்த்தல்,
காடுபடு பொருள்களை அடிப்படையாகக் கொண்ட
தொழிற்சாலைகளுக்கு உதவுதல்,
அரசுக்கு வருவாய் ஈட்டித் தருதல்.

THIRU B. VENKATASWAMY : Sir, may I know from the Hon. Minister whether such schemes have been implemented in our State and if so, which are the specified areas in the State ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவரவர்களே, 13—6—1974 இல் வனத் துறைக் கழகம் ஆரம்பிக்கப்பட்டது. 75,870 ஹெக்டேர் பரப்பளவு அந்தக் கழகத்தினிடத்தில் ஒப்படைக்கப் பட்டிருக்கிறது.

திரு. எம். ஏ. லத்திப் : தலைவரவர்களே, தரிசு நிலங்களில் புதிதாகக் காடுகளை உற்பத்தி செய்வதற்காக இந்தக் குழு ஏற்படுத்தப் பட்டிருக்கிறது என்பதில் மகிழ்ச்சி. ஆனால் ஏற்கெனவே உள்ள காடு களில் பெரும்பாலானவை அழிவுக்கு உட்பட்டு வருகின்றன. உதாரண மாக ரெவின்யூ ஃபாரஸ்ட் என்று இருக்கிறது, ரிசர்வ் ஃபாரஸ்ட் என்று இருக்கிறது. ரிசர்வ் ஃபாரஸ்டைக் காப்பாற்றுவதற்குப் போதுமான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. ஆனால் ரெவின்யூ ஃபாரஸ்டைக் காப்பாற்றுவதற்கு காட்டுத் துறை அதற்கான

நடவடிக்கைகளை எடுக்க முடியாத சூழ்நிலை இருக்கிறது. இதை மாற்றும் வகையில் இந்தக் குழு எல்லாக் காடுகளையும் காப்பாற்ற, ரெவின்யூ ஃபாராஸ்ட் உள்ளிட்ட எல்லாக் காடுகளையும் காப்பாற்றும் தன்மையில் ரெஃபரன்ஸ் கொடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவரவர்களே, காடுபடு பொருள்களை அடிப்படையாகக் கொண்டு புதிதாக ஆரம்பிக்கப்படும் தொழிற்சாலைகளுக்கு உதவுதல் ஒரு முக்கியமான குறிக்கோள். குறிப்பாக நான்கு மாவட்டங்களில்தான் அமல் நடத்தப்பட்டு வருகிறது. தரிசுப் பகுதிகளில் முந்திரி, சவுக்கு, யூகலிப்டஸ் ஆகியவைகளைப் பயிரிடும் திட்டம் இருக்கிறது. வனத்துறை தனியாக இயங்கி வருகிறது. மலைப்பகுதிக்காக தனியாக இயங்கி வருகிறது. பொதுவாக காடுகள் அழிக்கப்படக் கூடாது என்பது நல்ல நோக்கம். எல்லோரும் அதை ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். அதிகாரிகளுக்கும் நல்ல கவனம் இருக்க வேண்டுமென்பதில் ஐயமில்லை.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, இந்த ஃபாரஸ்ட் ப்ளான்டேஷன் கார்ப்பரேஷனில் நமது மாநிலத்திலுள்ள அரசு இரப்பர் தோட்டங்களும் உட்படுமா? இல்லையென்றால் அரசு இரப்பர் தோட்டங்களுக்காகத் தனியாக கார்ப்பரேஷன் அமைக்கும் திட்டம் இருப்பதாகக் கூறப்படுகிறதே, அது உண்மையா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவரவர்களே, தனியாக இரப்பர் கார்ப்பரேஷன் ஆரம்பிக்கப்படும் ஒரு செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

திரு. எம். தேவராசன் : இந்த பிளாண்டேஷன் பகுதிகளில் பல பிரச்சினைகள் ஏற்படுகின்றன. அந்த போர்டில் சட்ட மன்ற உறுப்பினர்களையும் இடம் பெறச் செய்தால் ஆலோசனைகள் கூற நலமாக இருக்குமாதலால் அதற்கு அரசு நடவடிக்கை எடுத்துக்கொள்ள முன் வருமா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பிரதிநிதியாக இருக்கிற மாவட்டம் இந்தக் குழுவில் சேர்க்கப்படவில்லை.

1975 மார்ச் 6]

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: இந்தக் கார்ப்பரேஷன் அதிகார வரம்பிற்குள் இருக்கும் காட்டிலாகா நிலங்களில் தென்னேயும் பயிரிட ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: முக்கியமாக நான் சொன்ன மூன்று பொருள்கள் பயிரிடப்படுகின்றன. தென்னே பயிரிடப்படக் கூடிய இடம் இருக்குமானல் நிச்சயமாகப் பரிசிலனே செய்து எடுத்துக் கொள்ளலாம்.

திரு. க. உரொ. எட்மண்ட்: ஃபாரஸ்ட் பிளான்டேஷன் கார்ப்பரேஷன் ஆரம்பித்த காரணத்தால் ஏற்கெனவே வனத் துறையில் பணியாற்றிய ஊழியர்கள் பாதிக்கப்படுவார்கள் என்ற அச்சம் இருந்ததே, அப்படி யாராவது பாதிக்கப்பட்டிருக்கிருர்களா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: தலேவரவர்களே, பாதிக்கப் படவில்லே, சற்று அதிகமாகச் சலுகை பெற்றிருக்கிருர்கள்.

Cashew Plantations.

* 215 Q.—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Commercial Taxes be pleased to state the names of places in the forest areas in the State where cashew plantations have been raised in 1973-74?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: அறந்தாங்கி, உடையார் பாளேயம், மதுராந்தகம், திருவள்ளூர், செங்கற்பட்டு ஆகிய பகுதிகளில், 1,449 ஹெக்டேர் பரப்பளவில் முந்திரி வளர்க்கப்படுகிறது.

THIRU K. S. KOTHANDARAMIAH: The very name coconut, i.e., the fruit of the south, indicates that the entire south is fit for cultivation of coconut. May I know from the Hon. Minister why the doubts whether this area is fit or that area is fit? May I know whether he will arrange to make an investigation and see that every area is cultivated with coconut?

மாண்புமிகு பேரவைத் தலேவர்: இது முந்திரி பற்றிய கேள்வி, தென்னே பற்றிய கேள்வி அல்ல.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: முந்திரிப் பயிர் விவசாயிகளுக்கு அரசாங்க உதவி செய்கிற செயற்குறிப்பு இருக்கிறதா? இல்லேயென்ருல் இனிமேலாவது பரிசீலிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: இது விவசாயத் துறை அமைச்சரிடத்தில் கேட்க வேண்டிய கேள்வி. இது வனத் தோட்டக் கழகத்தின் மூலமாக முந்திரி பயிரிடப்படும் திட்டமாகும்.